**சுருக்கம்**

பள்ளிகள் -பள்ளிகளில் ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்புதல்- ஆணை வெளியிடப்பட்டது- திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித்துறை**

அரசாணை (நிலை) எண் 51
நாள் 1.6.2004

படிக்கப்பட்டவை:-

அரசாணை (நிலை) எண் 100 பள்ளிக் கல்வித்துறை நாள் 27.6.2003

ஆணை:

பார்வையில் படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து வகைப் பள்ளிகளிலும் அந்தந்த வகை ஆசிரியர் பணியிடங்களை தொகுப்பூதியத்தில் நிரப்ப அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அவ்வரசாணையில் ஆசிரியர் காலிப் பணியிடங்களைத் தொகுப்பூதியத்தில் நிரப்பப்படுவதற்கு ஏதுவாக அந்தந்த பணியிட விதிகளுக்கு உரிய திருத்தம் வெளியிடப்படும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அதன்படி அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் உள்ள அனைத்து வகை ஆசிரியர் பணியிடங்களையும் தொகுப்பூதியத்தில் நிரப்ப ஏதுவாக தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தும்) விதிகள், 1974க்கு அரசாணை (நிலை) எண் 125 பள்ளிக் கல்வித்துறை நாள் 12.11.2003ல் உரிய திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அரசுப் பள்ளிகளில் உள்ள அனைத்து வகை ஆசிரியர் பணியிடங்களையும் தொகுப்பூதியத்தில் நிரப்ப ஏதுவாக தொடர்புடைய சிறப்பு/ தற்காலிக விதிகளுக்கு விதி திருத்தம் செய்ய ஆராயும்பொழுது, தொகுப்பூதியம் பெறும் பணியாளர்கள் எந்த ஒரு அரசு பணியையும் சார்ந்தவராகக் கருத இயலாது என்றும், அதனால் தொடர்புடைய சிறப்பு/ தற்காலிக விதிகளுக்குத் திருத்தம் செய்ய இயலாது எனவும் அரசுப் பள்ளிகளில் செய்யப்படவிருக்கும் தொகுப்பூதிய ஆசிரியர் நியமனங்களை முறைப்படுத்த தமிழ்நாடு மாநிலம் மற்றும் சார்நிலைப் பணி விதிகள் விதி 11-ன் கீழ் ஒப்பந்த படிவம் நிர்ணயம் செய்தால் போதும் என சட்ட ரீதியாக கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பார்வையில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆசிரியர் காலிப் பணியிடங்களை தொகுப்பூதியத்தில் நிரப்பப்படுவதற்கு ஏதுவாக அந்தந்த பணியிட விதிகளுக்கு உரிய திருத்தம் வெளியிடப்படும் என்று குறிப்பிட்டுள்ளது அரசுப் பள்ளிகளில் செய்யப்படவிருக்கும் தொகுப்பூதிய ஆசிரியர் நியமனங்களுக்குப் பொருந்தாது என்றும், அரசுப் பள்ளிகளில் செய்யப்படவிருக்கும் தொகுப்பூதிய ஆசிரியர் நியமனங்களை முறைப்படுத்த தமிழ்நாடு மாநிலம் மற்றும் சார்நிலைப்

பணி விதிகள் விதி 11-ன்கீழ் ஒப்பந்த படிவம் தனியாக வெளியிடப்படும் எனவும் அதன்படி அரசாணை (நிலை) எண் 100 பள்ளிக் கல்வித்துறை நாள் 27.6.2003க்கு உரிய திருத்தம் அரசால் வெளியிடப்படுகிறது. இதனைத்தொடர்ந்து அரசாணை (நிலை) எண் 100 பள்ளிக் கல்வித்துறை நாள் 27.6.2003ன் பத்தி 4-ல் குறிப்பிட்டுள்ள வாசகமான **"பத்தி 1 மற்றும் 2ல் குறிப்பிட்டவாறு உரிய பணி விதிகளுக்குத் திருத்தம் வெளியிட்ட பின்னர்"** என்ற வார்த்தைக்குப் பதில் **" பத்தி 1 மற்றும் 2ல் குறிப்பிட்டவாறு தொகுப்பூதிய நியமனங்களை முறைப்படுத்த தமிழ்நாடு மாநிலம் மற்றும் சார்நிலைப் பணி விதிகள், விதி 11-ன் கீழ் ஒப்பந்தப் படிவம் இறுதியான பின்னர்"** என வாசிக்க அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின்ஆணைப்படி)

கு. ஞானதேசிகன்,
அரசு செயலாளர்

பெறுநர்

தொடக்கக் கல்வி இயக்குநர்., சென்னை-6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை-6.
உறுப்பினர்-செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-6.
மாநில திட்ட இயக்குநர், மாவட்டத் தொடக்கக் கல்விதிட்டம், சென்னை-6.
பள்ளிக்கல்வி (ஜி, எச்எஸ், எம் மற்றும் எக்ஸ் பிரிவுகள்) துறை, சென்னை-9.
பள்ளிக்கல்வி (இ பிரிவு) துறை, சென்னை-9

நகல்

நிதித்துறை (கல்வி), சென்னை-9.
நிதித்துறை (சிஎம்பிசி), சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, சென்னை-9.
பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.
சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை-9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
சமூகநல இயக்குநர், சென்னை-5.
மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் துறை இயக்குநர், சென்னை-5.
முதன்மை வனத்துறை பாதுகாவலர், சென்னை-15.
செய்தி மற்றும் விளம்பரத்துறை இயக்குநர், சென்னை-9.
நேர்முக உதவியாளர், மாண்புமிகு கல்வி அமைச்சர் அலுவலகம், சென்னை-9
நேர்முக உதவியாளர், மாண்புமிகு நிதி அமைச்சர் அலுவலகம், சென்னை-9
நேர்முக உதவியாளர், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
பள்ளிக்கல்வி செயலரின் தனிச்செயலர்,சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்